ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2381/24 - 2024 අප්‍රේල් මස 22 වැනි සඳුදා - 2024.04.22

2381/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 3/2021 (II)

### 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2024.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்களை அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குதல் பற்றிய வழிகாட்டுநெறிகள்- தீர்வையற்ற தொழிற்பாடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளை அல்லது தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் முறையே (3) ஆம் அல்லது (4) ஆம் உப ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

1A - PG 6702 — 364 (2024/04)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) விடயத்துக்கேற்ப, (3) ஆம் அல்லது (4) ஆம் உப ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்தியதன் மேல், தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளும் தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகளும் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்- தீர்வையற்ற தொழிற்பாடுகள் ஒன்றாகப் பெயர் குறிக்கப்படலாம்.

(3) தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் என்ற வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் பின்வரும் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) குறைந்தபட்சம் ஐந்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட முதலீட்டைச் செய்தல் ;

(ஆ) தீர்வையற்ற தொழிற்பாடுகளில் உலகளாவிய ரீதியிலான அனுபவத்தை அது உடையதென்றும் ஆடம்பர உயர்முனை வகைப்படுத்தப்பட்ட சில்லறைத் தயாரிப்புகளைக் கொண்ட அலுவல்துறை ஒன்றுக்கான அணுகுதலைக் கொண்டுள்ளதென்றும் ஆணைக்குழுவின் திருப்திக்கு எடுத்துக்காட்டுதல் ;

(இ) அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களைச் செல்லுபடியாக்குவதற்காகக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பற்றிணையில்லா ஒருங்கிணைத்தலுடன் ஆணைக்குழுவின் பயணி உட்பிரவேசப்பதிவுச் செய்முறையைக் கடைப்பிடித்தல் ; அத்துடன்

(ஈ) 7 ஆம் ஒழுங்குவிதிக்கு இணங்க, இலங்கைச் சுங்கத்தின் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாட்டு இணங்கியொழுகுகைகளின் மேற்பார்வையையும் கண்காணிப்பையும் கடைப்பிடித்தல்.

(4) தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள் என்ற வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் பின்வரும் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) குறைந்தபட்சம் ஏழு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட முதலீட்டைச் செய்தல் ; அத்துடன்

(ஆ) அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களைச் செல்லுபடியாக்குவதற்காகக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பற்றிணையில்லா ஒருங்கிணைத்தலுடன் ஆணைக்குழுவின் பயணி உட்பிரவேசப் பதிவுச் செய்முறையைக் கடைப்பிடித்தல் ; அத்துடன்

3. (அ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்- தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் என பெயர் குறிக்கப்பட்ட வியாபாரமொன்று ; அல்லது

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரம்- தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள் என பெயர் குறிக்கப்பட்ட வியாபாரமொன்று,

சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கட்டளையொன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இருபதாண்டு காலப்பகுதியொன்றுக்காக, சட்டத்துக்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்புகளுக்கு அல்லது அவற்றின் கீழான ஊக்குவிப்புகளுக்கு, உரித்துடையனவாதல் வேண்டும்.

4. அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை திருப்தி செய்வதுடன் வர்த்தமானியில் இவ்வொழுங்குவிதிகளின் வெளியீட்டுத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியினுள் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்- தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் அல்லது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்- தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள் ஒன்றாகப் பெயர் குறிக்கப்பட்டால் மட்டுமே, அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆள் 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அளிக்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

5. இவ்வொழுங்கு விதிகளுக்கிணங்க செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்- தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் அல்லது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்- தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள் ஒன்றாகப் பெயர் குறிக்கப்பட்டுள்ள ஆளொருவர்-

(அ) இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை I இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட பண்டங்களை அவ்வட்டவணையின் நிரல் II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட உற்பத்தி விபரணத்தினுள் அத்துடன் அவ்வட்டவணையின் நிரல் III இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் அனுமதிக்கப்பட்ட அளவுகளில் மட்டுமே விற்பனை செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இன் நிரல் I, நிரல் II, நிரல் III, நிரல் IV, நிரல் V மற்றும் நிரல் VI என்வற்றின் தலைப்புகளில் குறித்துரைக்கப்படும் அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு (ஆ) என்னும் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்படும் அனுமதிக்கப்பட்ட பண்டங்களை அனுமதிக்கப்பட்ட படிகளினுள் அத்துடன் அவ்வட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட படிகளின் விபரங்களுக்கு நேரொத்ததான அத்தகைய ஒவ்வொரு நிரலிலும் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் வேறு நிபந்தனைகளுக்கிணங்கவும் விற்பனை செய்தல் வேண்டும்.

6. தீர்வையற்ற சில்லறைத் தொழிற்படுத்துநர்கள் இவ்வொழுங்கு விதிகளுக்கான நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட இலங்கையின் இரட்டைப் பிரசைகள் உட்பட இலங்கைக் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் மற்றும் இலங்கையில் வதிவிட விசாவுடனான வெளிநாட்டு

கடவுச்சீட்டை வைத்திருப்பவர்களுடன் தீர்வையற்ற சில்லறை கொடுக்கல் வாங்கல்களை கொண்டு நடாத்துவதற்கு (காசற்ற இலத்திரனியல் கொடுப்பனவு முறைமை) எண்ணிம கொடுப்பனவு முறையொன்றை பயன்படுத்துதுல்வேண்டும்.

7. தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் மற்றும் தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள் இலங்கைச் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை மற்றும் கவனிப்பின்கீழ் இருத்தல் வேண்டும்.

8. இவ்வொழுங்குதிகளில்–

“சட்டம்” என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் என்று பொருளாகும் ;

“அதிகாரமளிக்கப்பட்ட ஆள்” என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

“ஆணைக்குழு” என்பது, சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்று பொருளாகும் ;

“தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகள்” என்பது, கொழும்புத் துறைமுக நகரத்தின்அதிகார இடப்பரப்பினுள் பல தீர்வையற்ற சில்லறைத் தொழிற்படுத்துநர்களையும் மற்றும் அத்தகைய தீர்வையற்ற வணிக வளாகங்களின் உட்கட்டமைப்பையும் கொண்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்வையற்ற வணிக வளாகங்களை அபிவிருத்தி செய்து முகாமை செய்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் தொழிற்பாடுகள் என்று பொருளாகும் ;

“தீர்வையற்ற தொழிற்பாடுகள்” என்பது, தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளும் தீர்வையற்ற வணிக வளாகத் தொழிற்பாடுகளும் என்று பொருளாகும் ; அத்துடன்

“தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள்” என்பது, கொழும்புத் துறைமுக நகர (தீர்வையற்ற தொழிற்பாடுகள்) விதிகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்கத் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகளை நடாத்துகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் தொழிற்பாடுகள் என்று பொருளாகும் ;

“வதிவிட விசா வைத்திருப்பவர்” என்பது, இலங்கைக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இலங்கை வதிவிட விசாவின் ஏதேனும் வகையுடனான வலிதான வெளிநாட்டு கடவுச்சீட்டொன்றை வைத்திருக்கின்ற ஆளொருவர் எனப் பொருள்படும் ;

“இலங்கை கடவுச்சீட்டு வைத்திருப்பவர்” என்பது, இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டுள்ள இலங்கையரொருவர் உட்பட இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வலிதான கடவுச்சீட்டொன்றை வைத்திருக்கின்ற ஆளொருவர் எனப் பொருள்படும் ; அத்துடன்

“உல்லாசப் பயணி” என்பது, வலிதான விசாவொன்றுடனான வெளிநாட்டு கடவுச்சீட்டை வைத்திருப்பவரொருவர் எனப் பொருள்படும்.

9. 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் 25 ஆந் தேதிய 2355/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கொழும்புத்துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்களை அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குதல் பற்றிய வழிகாட்டுநெறிகள்- தீர்வையற்ற தொழிற்பாடுகள்) ஒழுங்குவிதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

அட்டவணை I
அனுமதிக்கப்பட்ட அளவுகளில் அனுமதிக்கப்பட்ட பொருட்கள்

(ஒழுங்குவிதி 5)

| | நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| இல. | அனுமதிக்கப்பட்ட பொருட்கள் பட்டியல் | உற்பத்திப் பொருள் வகை (வரையறை செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் வகைக்கு வரையறுக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட தொகை) | அனுமதிக்கப்பட்ட அளவுகள் (விற்பனை அலகுகள்) |
| 1 | குடிபானங்கள் உட்பட இலங்கைத் தேயிலை மற்றும் இலங்கை வாசனைத் திரவியங்கள்* | குடிபானங்கள் உட்பட இலங்கைத் தேயிலை மற்றும் இலங்கை வாசனைத் திரவியங்கள் - | வரையறை இல்லை |
| 2 | ஆடைகள் | வணிக மற்றும் முறையான ஆடைகள், தற்காலிக ஆடை, விளையாட்டு ஆடை மற்றும் உள்ளாடைகள் | மொத்தமாக ஆகக் கூடுதலாக 16 தொகுதிகள் (வணிக மற்றும் முறையான ஆடைகள் அல்லது தற்காலிக ஆடை, விளையாட்டு ஆடை அல்லது உள்ளாடைகள் என்பவற்றின் ஆகக் கூடுதலாக 4 தொகுதிகள்) |
| 3 | கணனி மற்றும் கணனி சாதனங்கள் | கணனிகள் என்றால் - மடிக்கணனிகள் மற்றும் டெப்லெட்கள். கணனி சாதனங்கள் என்பது உள்ளீட்டு/வெளியீட்டு ஆதாரமாகப் பயன்படுத்தக்கூடிய வெளிப்புற இலத்திரனியல் சாதனங்கள் என்று பொருள்படும் | மொத்தமாக ஆகக் கூடுதலாக 02 தொகுதிகள் மற்றும் கணனி சாதனங்களில் 1 தொகுதி |
| 4 | தின்பண்டங்கள் | சொக்ளேட்கள் மற்றும் இனிப்பு வகைகள் | மொத்தமாக ஆகக்கூடுதலாக 5 கிலோகிராம் |
| 5 | மட்பாண்டப் பொருட்கள் | மட்பாண்டங்கள் என்பது பீங்கான் உணவுத் தட்டுக்கள் | இரவு போசன பீங்கான் ஆகக் கூடுதலாக 1 தொகுதி |
| 6 | உணவு வகைகள் | - விதைகள், பேரீச்சம்பழம், உலர்ந்த பழங்கள், தானியவகைகள், சோஸ்கள், பரப்பிகள் மற்றும் தேன் | மொத்தமாக ஆகக் கூடுதலாக 02 கிலோகிராம் |
| 7 | தோல் உதிரிப் பாகங்கள் | பட்டிகள், பைகள், பணப்பைகள் மற்றும் சப்பாத்துக்கள் | மொத்தமாக ஆகக் கூடுதலாக 16 தொகுதிகள் (பட்டிகள், பைகள், பணப்பைகள் மற்றும் சப்பாத்துக்கள் என்பவற்றின் ஆகக் கூடுதலாக 04 தொகுதிகள்) |
| 8 | பயணப்பை | பயணப்பைகள் மற்றும் ஆடைப்பெட்டிகள் | மொத்தமாக ஆகக் கூடுதலாக 02 தொகுதிகள் |
| 9 | கையடக்கத்தொலைபேசி மற்றும் உதிரிப்பாகங்கள் | - | மொத்தமாக ஆகக் கூடுதலாக 02 தொகுதிகள் |
| 10 | பேனாக்கள் மற்றும் பேனா உதிரிப்பாகங்கள் * | - | மொத்தமாக ஆகக் கூடுதலாக 12 தொகுதிகள் |
| 11 | நறுமண ஒப்பனை மற்றும் அழகு சாதனப் பொருட்கள் | - | நறுமணப் பொருட்கள் ஆகக் கூடுதலாக 250 மி.லீ. ஒப்பனைப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள், அழகுசாதன உதிரிப்பாகங்கள் (ஒவ்வொன்றிலும் 02 தொகுதிகள், ஒவ்வொரு வகைப் பொருட்களிலும் அல்லாமல்) |

அட்டவணை I
அனுமதிக்கப்பட்ட அளவுகளில் அனுமதிக்கப்பட்ட பொருட்கள்

(ஒழுங்குவிதி 5)

| இல. | நிரல் I<br>அனுமதிக்கப்பட்ட பொருட்கள் பட்டியல் | நிரல் II<br>உற்பத்திப் பொருள் வகை (வரையறை செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் வகைக்கு வரையறுக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட தொகை) | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட அளவுகள் (விற்பனை அலகுகள்) |
|---|---|---|---|
| 12 | தனிப்பட்ட பயன்பாடு மற்றும் கவனிப்புக்கான சிறு இலத்திரனியல் பொருட்கள் | ப்ளூ டூத் ஸ்பீக்கர்கள், ஹெட்ஃபோன்கள் மற்றும் இயர்போன்கள், சவரன்கள் தலைமுடி உலர்த்திகள் மற்றும் மயிர் நேராக்கிகள், பற்தூரிகைகள் மற்றும் வாய்வழி பராமரிப்பு சாதனங்கள், சுகாதார மசாஜ் சாதனங்கள், சுகாதார சோதனை சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் விளையாட்டுப் பொருட்கள் | ஒவ்வொரு உற்பத்தி வகையிலும் ஆகக் கூடுதலாக 01 தொகுதி |
| 13 | ஸ்பிரிட், வைன் மற்றும் பியர்** | - | ஸ்பிரிட்களின் ஆகக் கூடுதலாக 02 லீட்டர்கள், வைன் மற்றும் பியர்கள் 2 லீட்டர்களுக்கு மேற்படக் கூடாது. |
| 14 | கருப்புக் கண்ணாடிகள் மற்றும் கண் அணிகலங்கள் | - | மொத்தமாக ஆகக் கூடுதலாக 04 தொகுதிகள் |
| 15 | புகையிலை ** | சிகரட்டுக்கள் மற்றும் சுருட்டுக்கள் | அதிகபட்சம் 01 பெட்டி சிகரெட்டுகள் (200 சிகரெட்டுகள்) ரூ 01 பெட்டி சுருட்டுகள் (அதிகபட்சம் 50)** |
| 16 | குளியலறைப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான தயாரிப்புக்கள் | குளியலறைப் பொருட்கள்: ஆண், பெண் மற்றும் குழந்தை களுக்காகன தலைமயிர், முகம் மற்றும் வாய் மற்றும் உடல் பராமரிப்பு பொருட்கள்<br><br>குழந்தைகளுக்கான பொருட்கள்: டயபர்/பெம்பர்ஸ் | குளியலறை நீர்/ ஈ யு டி குளியலறையில் ஆகக் கூடுதலாக 0.5 லீட்டர். ஏனைய ஒவ்வொரு குளியலறைப் பொருட்களிலும் ஆகக் கூடுதலாக 02 தொகுதிகள் மற்றும் டயபர்/பம்பர்களின் ஆகக் மூடுதலாக 24 துண்டுகள். ஒவ்வொரு வகையிலும் அல்லாமல். |
| 17 | விளையாட்டுப் பொருட்கள் | பொம்மைகள். இயங்கு பொருட்கள், நிர்மாணிப்புப் பொருட்கள், இலத்திரனியல் மற்றும் கல்வி தொடர்பான விளையாட்டுப் பொருட்கள்- | மொத்தமாக அதிகபட்சம் 6 தொகுதிகள் (ஒவ்வொரு வகை விளையாட்டுப் பொருட்களிலும் அதிகபட்சம் 2 தொகுதிகள், ஒவ்வொரு வகையிலும் அல்லாமல்.) |
| 18 | கைக் கடிகாரங்கள் மற்றும் ஸ்மார்ட் பட்டிகள் | | மொத்தமாக ஆகக் கூடுதலாக 02 தொகுதிகள் |
| | * | புறப்படுகின்ற பயணிகளுக்கு மாத்திரம் | |
| | · ** | இத்தகைய ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இன் நிபந்தனை 7 இற்கு ஏற்ப | |

அட்டவணை II (ஒழுங்குவிதி 5)

அனுமதிக்கப்பட்ட படிகள்

| இல. | நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV | நிரல் V | நிரல் VI |
|---|---|---|---|---|---|---|
| | விபரங்கள் | இரட்டைப் பிரஜைகள் உட்பட இலங்கைக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் மற்றும் செல்லுபடியாகும் ஆதாரத்துடன் இலங்கைக்கு திரும்பிய இலங்கையில் வதிவிட விசாக்களுடன் கூடிய வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் | குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டை வைத்து இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் | இலங்கையின் இரட்டைப் பிரஜைகள் உட்பட இலங்கைக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் மற்றும் செல்லுபடியாகும் பயண ஆவணங்களுடன் வெளிநாடுகளுக்குச் செல்ல உத்தேசித்துள்ளவர்கள். இலங்கையில் வதிவிட விசாவைக் கொண்ட வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் | இலங்கைக்கு வெளியில் வசிப்பவர்கள் இணையம் மூலம் அனுமதிக்கப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்து, அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட பொருட்களை இலங்கைக்கு வெளியில் உள்ள ஒரு இடத்திற்கு விநியோகிக்க உத்தேசித்துள்ளவர்கள். | இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்ட வாறு இலங்கையில் நிறுவப்பட்டு இயங்குகின்றன இராஜதந்திர நிறுவனங்கள், |
| 1 | சுங்கத் தீர்வை சலுகை பெறுமதி ஐ.அ. டொலர்களில் | ஆண்டுக்கான வரம்பு ஐ.அ.டொ. 2,000.<br><br>(அனைத்து கட்டணங்களும் கடன் அல்லது பற்று அட்டைகள் அல்லது கிவ்ஆர் குறியீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர் ஒருவர் அவரின் சொந்த டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் கொடுப்பனவு சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்) | அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு வருடாந்த மதிப்பு வரம்பு பொருந்தாது.<br><br>(சுற்றுலாப் பயணிகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற அனுமதிக்கப்பட்ட பொருட்கள் அத்தகைய சுற்றுலாப் பயணிகளிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. சுற்றுலாப் பயணி இலங்கையிலிருந்து புறப்படும் போது சேகரிக்கும்பொருட்டு விமான நிலையத்திற்கு அத்தகைய பொருட்கள் வழங்கப்படுவதை தீர்வையற்ற தொழிற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.) | அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு வருடாந்த மதிப்பு வரம்பு பொருந்தாது.<br><br>(வெளிச் செல்லும் பயணிகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற அனுமதிக்கப்பட்ட பொருட்கள் அத்தகைய பயணிகளிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. வெளிச் செல்லும் பயணி இலங்கையிலிருந்து புறப்படும் போது சேகரிக்கும்பொருட்டு விமான நிலையத்திற்கு அத்தகைய பொருட்கள் | அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வருடாந்த மதிப்பு வரம்பு ஏற்புடையதாகாது.<br><br>(இலங்கைக்கு வெளியில் வசிக்கும் நபர்களால் வாங்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட பொருட்கள் இலங்கைக்கு வெளியே உள்ள பொருத்தமான இடங்களுக்கு வழங்கப்படுவதை தீர்வையற்ற தொழிற்பாட்டாளர்கள் உறுதிசெய்ய வேண்டும்.) | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டவாறு |

அட்டவணை II

அனுமதிக்கப்பட்ட படிகள்

(ஒழுங்குவிதி 5)

| இல. | நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV | நிரல் V | நிரல் VI |
|---|---|---|---|---|---|---|
| | | | | வழங்கப்படுவதை தீர்வையற்ற தொழிற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.) | (இலங்கையில் வசிக்கும் எந்தவொரு நபரும் அனுமதிக்கப்பட்ட பொருட்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொள்வனவு செய்து இலங்கைக்கு வழங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்) | |
| 2 | அனுமதிக்கப் பட்ட பொருட்களின் அனுமதிக் கப்பட்ட தொகை - (பார்க்க அட்டவணைI) | அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு | தொகை வரம்பு ஏற்புடையதாக மாட்டாது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பொருட்கள் | தொகை வரம்பு ஏற்புடையதாக மாட்டாது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பொருட்கள் | தொகை வரம்பு ஏற்புடையதாகாது. அட்டவணை I இல் குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்ட பொருட்கள் | தொகையானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டவாறு<br><br>அனுமதிக்கப் பட்ட பொருட்கள் அட்டவணை I இல் குறிப்பிடப் பட்டவாறு |
| 3 | ஆரம்பம் | இலங்கைக்கு வருகை தந்த முதலாவது தினத்திலிருந்து 04 நாட்களுக்குள் | இலங்கைக்கு வருகை தந்த தினத்திலிருந்து | பயணத் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | கொழும்புத் துறைமுக நகர தீர்வையற்ற வாடிக்கையாளர் ஒருவராக பதிவு செய்த பின்னர் | தொகையானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக் கப்பட்டவாறு<br><br>அனுமதிக்கப் பட்ட பொருட்கள் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்ட வாறு |

அட்டவணை II (ஒழுங்குவிதி 5)

அனுமதிக்கப்பட்ட படிகள்

| இல. | நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV | நிரல் V | நிரல் VI |
|---|---|---|---|---|---|---|
| 4 | சலுகையின் செல்லுபடியாகும் காலம் | இலங்கைக்கு வருகை தந்த முதலாவது தினத்திலிருந்து வருடாந்த சலுகை | குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறு இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் | ஏற்புடையதாகாது | ஏற்புடையதாகாது | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டவாறு |
| 5 | கொள்வனவு காலம் | இலங்கைக்கு வருகை தந்த முதல் 4 நாட்களுக்குள் ஒற்றை வருகை | இலங்கையில் தங்கியிருக்கின்ற காலத்தில் பல வருகைகள் | பயணத் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | பதிவுசெய்த பின்னர் கொள்வனவுக் கட்டளையை மேற்கொள்ளலாம் | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டவாறு |
| 6 | வருகைகளின் எண்ணிக்கை (கொள்வனவு காலத்திற்குள்) | இலங்கைக்கு வருகை தந்த முதல் 4 நாட்களுக்குள் வருடாந்தம் ஒற்றை வருகை | இலங்கையில் தங்கியிருக்கின்ற காலத்தில் பல வருகைகள் | பயணத் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | ஏற்புடையதாகாது | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டவாறு |
| 7 | அட்டவணை I இல் குறிப்பிடப் பட்டுள்ள அளவு வரம்புகளுக்கு மேல் அதிக அளவு கொள்வனவு | அனுமதிக்கப்படமாட்டாது | தொகை வரம்பு ஏற்புடையதாக மாட்டாது. அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பொருட்கள் (சுற்றுலாப் பயணி இலங்கையிலிருந்து புறப்படும் போது சேகரிக்கும்பொருட்டு விமான நிலையத்திற்கு அத்தகைய பொருட்கள் வழங்கப்படுவதை தீர்வையற்ற தொழிற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.) | தொகை வரம்பு ஏற்புடையதாக மாட்டாது. (வெளிச் செல்லும் பயணி இலங்கையிலிருந்து புறப்படும் போது சேகரிக்கும்பொருட்டு விமான நிலையத்திற்கு அத்தகைய பொருட்கள் வழங்கப்படுவதை தீர்வையற்ற தொழிற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.) | தொகை வரம்பு ஏற்புடையதாக மாட்டாது. (இலங்கைக்கு வெளியில் வசிக்கும் நபர்களால் வாங்கப்பட்ட அனுமதிக்கப் பட்ட பொருட்கள் இலங்கைக்கு வெளியே உள்ள பொருத்தமான இடங்களுக்கு வழங்கப் படுவதை தீர்வையற்ற தொழிற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.) | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டவாறு |
| 8 | அனுமதிக்கப் பட்ட வாடிக்கை யாளர், கொழும்புத் துறைமுக நகர தீர்வையற்ற வியாபாரங்க ளுக்கு குடும்ப உறுப்பினர்க ளுடன் செல்ல முடியுமா | அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர் மற்றும் ஒரு குடும்ப அங்கத்தவர் மாத்திரம் அனுமதிக்கப்படுவர் | அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர் மாத்திரம் அனுமதிக்கப்படுவார் | அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர் மாத்திரம் அனுமதிக்கப்படுவார். | ஏற்புடையதாகாது | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக் கப்பட்டவாறு |

| அட்டவணை II இல் விபரிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் விற்பனை நிபந்தனைகள் | |
|---|---|
| 1 | இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பொருட்கள், அனுமதிக்கப்பட்ட அளவுகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட வரியில்லா கொடுப்பனவு ஆகியவை கொழும்புத் துறைமுக நகரத்தின் தீர்வையற்ற அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளரால் பயன்படுத்துவதற்கு ஏற்புடையதாகும். |
| 2 | அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்வையற்ற சலுகைக் கொடுப்பனவு, இலங்கைக்கு வந்த முதல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும்<br>மற்றும் பயன்படுத்தப்படாத சலுகைக் கொடுப்பனவுகள் முதல் வருகை தந்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் காலாவதியாகிவிடும். |
| 3 | அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்வையற்ற சலுகைக் கொடுப்பனவு கொழும்பு துறைமுக நகரத்திற்கு மாத்திரமே பொருந்தும், மேலும் இது இலங்கையில் உள்ள வேறு எந்த தீர்வையற்ற கொடுப்பனவுகளிலிருந்தும் சுயாதீனமானது. |
| 4 | அட்டவணை II இன் ஒவ்வொரு நிரலின் தலைப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள், பொருந்தக்கூடிய போக்குவரத்து மற்றும் இறுதி இலக்கு இணக்கத் தேவைகளின் அடிப்படையில், கொழும்பு துறைமுக நகரத்தின் தீர்வையற்ற அனுமதிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் அளவுகளை வாங்குவதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். |
| 5 | பொருந்தக்கூடிய அனைத்து உள்நாட்டு வரிகளைச் செலுத்துவதற்கான தேவைகளுக்கு இணங்குதல் மற்றும் போக்குவரத்தின் போது மற்றும் இறுதி இலக்கின் போது கொண்டு செல்லல் கட்டுப்பாடுகள் அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் பொறுப்பாகும். |
| 6 | கொழும்பு போர்ட் சிட்டியில் தீர்வையற்ற அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களால் வாங்கப்படும் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் இலங்கையில் அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளரால் மீண்டும் விற்கப்படவோ அல்லது பரிமாறிக்கொள்ளவோ கூடாது. இது அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் நுகர்வு மற்றும் பயன்பாட்டிற்காக மாத்திரமே. |
| 7 | அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் 18 வயது அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும். அட்டவணை I குறிப்பிடப்பட்டுள்ள ஸ்பிரிட், வைன் மற்றும் பியர் ஆகியவை 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களால் வாங்கப்படலாம். எவ்வாறாயினும், அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி புகையிலையை 21 வயது அல்லது அதற்கு மேற்பட்ட புறப்படும் வாடிக்கையாளரால் மாத்திரமே வாங்க முடியும், அத்தகைய வாடிக்கையாளர் இலங்கையிலிருந்து புறப்படும்போது விமான நிலையத்தில் சேகரிக்க வேண்டும். |
| 8 | அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களைத் தவிர வேறு எவருக்கும் கொழும்புத் துறைமுக நகரத்தில் தீர்வையற்ற அனுமதிக்கப்பட்ட பொருட்களை வாங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். |

EOG 05-0195